செ.வெ. எண்: 799 நாள்: 29/12/2011

## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் அரையாண்டுத் தேர்வுகள் முடிவுற்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. விடுமுறை நாட்களில் மாணவ / மாணவியர்களுக்கு, குறிப்பாக 10 மற்றும் 12—ம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு, சிறப்பு வகுப்புகள் ஏதும் நடத்தக்கூடாதென ஏற்கனவே அனைத்து பள்ளிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது வங்கக்கடலில் உருவாகியுள்ள 'தானே' புயலின் காரணமாக இன்றும், நாளையும் 29.12.11 மற்றும் 30.12.11 அன்று சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாநிலம் முழுவதும் குறிப்பாக சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், கடலுார், விழுப்புரம், திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், துாத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளும், எக்காரணத்தை முன்னிட்டும் மாணவ / மாணவியர்களுக்கு சிறப்பு வகுப்புகள் மற்றும் மாணவர் சார்பான நிகழ்ச்சிகள் ஏதும் நடத்தக்கூடாதென மீளவும் வலியுறுத்தி தெரிவிக்கப்படுகிறது. மாவட்டங்களில் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படவில்லை என்பதை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்ட கல்வி அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பள்ளிக் கல்வித் துறை.**

**வெளியீடு: —**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**